# வானமாமலை மடத்து
# தனியன்கள் / வாழி திருநாமங்கள்



ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

வானமாமலை மடத்து தனியன்கள் / வாழி திருநாமங்கள் ..... 3
மணவாள மாமுனிகள் ..... 3
1. வானாமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி ..... 3
2. களமூர் வரத முனி ஸ்வாமி ..... 4
3. செண்டலங்கார ராமானுஜ ஜீயர் ஸ்வாமி ..... 5
4. அனைத்தழகும் கண்ட ரங்கப்ப ராமானுஜ ஸ்வாமி ..... 6
5. திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி ..... 6
6. எம்பெருமானார் ஸ்வாமி ..... 7
7. பெரிய திருவேங்கட ஸ்வாமி ..... 8
8. கோனப்ப ஸ்வாமி ..... 9
9. சின்ன ரங்கப்ப ஸ்வாமி ..... 10
10. நடுத் திருவேங்கட ஸ்வாமி ..... 11
11. பெரிய தெய்வநாயக ஸ்வாமி ..... 11
12. சின்ன திருவேங்கட ஸ்வாமி ..... 12
13. சின்ன தெய்வநாயக ஸ்வாமி ..... 13
14. கூரத்தாழ்வான் ஸ்வாமி ..... 13
15. ஶ்ரீவத்ஸ சிஹ்ந ஸ்வாமி ..... 14
16. திருநகரி வேங்கட ஸ்வாமி ..... 15
17. கோயில் திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி ..... 15
18. பெரிய சடகோப ராமானுஜ ஸ்வாமி ..... 16
19. பெரிய பட்டர் பிரான் ஸ்வாமி ..... 17
20. பெரிய கலியன் ராமானுஜ ஸ்வாமி ..... 18
21. பெரிய மதுரகவி ராமானுஜ ஸ்வாமி ..... 19
22. யோகி ராமானுஜ ஸ்வாமி ..... 20
23. சின்ன சடகோப ராமானுஜ ஸ்வாமி ..... 21
24. சின்ன பட்டர் பிரான் ஸ்வாமி ..... 21
25. சின்னக் கலியன் ராமானுஜ ஸ்வாமி ..... 22
26. சின்ன மதுரகவி ராமானுஜ ஸ்வாமி ..... 23
27. சின்ன ராமானுஜ ஸ்வாமி ..... 23
28. சடகோப ராமானுஜ ஸ்வாமி ..... 24
29. பட்டர் பிரான் ராமானுஜ ஸ்வாமி ..... 25
30. கலியன் ராமானுஜ ஸ்வாமி ..... 26

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# வானமாமலை மடத்து தனியன்கள் / வாழி திருநாமங்கள்

## மணவாள மாமுனிகள்

### தனியன்
### (அழகிய மணவாளன் அருளிச் செய்தது)

ஸ்ரீஷைலேஷ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ர ப்ரவணம் வந்தே$_3$ ரம்ய ஜாமாதரம் முநிம் ||

### வாழி திருநாமம்
### (ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச் செய்தது)

செய்ய தாமரைத் தாளிணை வாழியே
        சேலை வாழி திருநாபி வாழியே
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே
        சுந்தரத் திருத்தோளிணை வாழியே
கையும் ஏந்திய முக்கோலும் வாழியே
        கருணை பொங்கிய கண்ணிணை வாழியே
பொய் இலாத மணவாள மாமுனி
        புந்தி வாழி புகழ் வாழி வாழியே

### சீர்
### (மடத்துப் பிள்ளை அருளிச் செய்தது)

வாழி திருவாய்மொழிப் பிள்ளை மாதகவால்
வாழும் மணாவாள மாமுனிவன் - வாழியவன்
மாறன் திருவாய்மொழிப் பொருளை மாநிலத்தோர்
தேறும்படி உரைக்கும் சீர்

---

## 1. வானாமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
## (பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமி)

### தனியன்

ரம்யஜாமாத்ரு யோகீ$_3$ந்த்$_3$ர பாத$_3$ரேக$_2$ாமயம் ஸத$_3$ா |

த$_3$த$_3$ாயத்$_3$த$_4$ாத்ம ஸத்$_3$த$_3$ாதி$_3$ம் ராமாநுஜ முநிம் ப$_4$ஜே ||

### வாழி திருநாமம்

திருவிருந்த மலர்த் தாள்கள் வாழியே
        சிறந்த செந்துவராடையும் வாழியே
தருவிருந்தகை முக்கோலும் வாழியே
        தடம் புயத்தினில் சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை
        வாழ்த்தி வாய்ந்தருள் வாய் மலர் வாழியே
கருணை மேவு இராமானுச முனி
        கனக மௌலி கலந்தூழி வாழியே

அடியவர் தம் துயர் அனைத்தும் அறுத்தருள்வோன் வாழியே
        அணிபொழில் சிரீவரமங்கை அவதரித்தோன் வாழியே
கடிபொழில் சூழ் பூதூர் மன் கழல் பணிந்தோன் வாழியே
        கருத்தை அடர் புலன்கள் ஐந்தும் கடிந்து விட்டோன் வாழியே
வடமொழி தென்மொழி மறைகள் வகுத்துரைப்போன் வாழியே
        மணவாள மாமுனியை வாழ்த்துமவன் வாழியே
இடருததி முழுகும் எனை எடுத்தளிப்போன் வாழியே
        என் அப்பன் இராமானுச முனிவன் வாழியே

பணவாளரவில் துயில் அரங்கேசர் பதம் பணியும்
மணவாள மாமுனி மாமலர்த் தாள்களை வாழ்த்து நல்ல
குணவாளன் எந்தை இராமானுச முனி கோதில் பதம்
தணவா நிதி நமக்கு என்றென்றும் நாடோறும் சாற்று நெஞ்சே

### சீர்

வாழி இராமானுச முனிவன் மாமலர்த் தாள்
வாழியவன் கருணை மா நோக்கம் - வாழியே
எந்தை மணவாள முனி இன்னருளால் மாறன் இசைச்
செந்தமிழைத் தேர்ந்துரைக்கும் சீர்

---

## 2. களமூர் வரத முனி ஸ்வாமி

### தனியன்

க்ருபாம் வ்யோம மஹாஷைல ராமாநுஜ மஹாமுநே: |
ஸம்ப்ராப்யேந்த$_3$ாந ஸத்$_3$வ்ருத்திம் ஸேவே ராமாநுஜம் முநிம் ||

### வாழி திருநாமம்

சீராரும் எதிராசர் திறம் தெரிவோன் வாழியே
ஸ்ரீ சடகோபன் பாதம் சிந்தை வைப்போன் வாழியே
ஏராரும் வரமுனியை ஏத்துமவன் வாழியே
எந்தை இராமானுச முனிக்கு இனியனார் வாழியே
சோராமல் அடியேனைத் தொடர்ந்தளிப்போன் வாழியே
சொற்றமிழ் வேதப் பொருளைத் தொகுத்துரைப்போன் வாழியே
ஆராத ஆர்வமுடன் ஆத்தானை அடி பரவும்
அருள்களப ராமானுச முநி அனவரதம் வாழியே

### சீர்

வாழியவே களமூர் வரத முனி மலர் அடிகள்
வாழியவன் வாழ் கருணைக் கண்ணிணையும் - வாழியவே
வானமாமலை முனிவன் வாழ் அருளால் ஆழ்வார்கள்
வாய் மொழியின் வளம் உரைக்கும் சீர்

---

## 3. செண்டலங்கார ராமானுஜ ஜீயர் ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீ ராமாநுஜ யோகீ$_3$ந்த்$_3$ர பத$_3$பங்கஜ ஷட்$_2$பத$_3$ம் |
வாத்ஸல்யாதி$_3$ கு$_3$ணாவாஸம் ராமாநுஜ முநிம் ப$_3$ஜே ||

### வாழி திருநாமம்

சீராரும் வரமங்கை சிறக்க வந்தோன் வாழியே
தெய்வநாயகன் செல்வம் திருத்துவிப்போன் வாழியே
ஆராத அன்புடனே அழகான மடம் கட்டி
அரங்க நகர் அப்பன் அருள் அடைந்த பிரான் வாழியே
ஏராரும் சடகோபன் எதிராசர் எழில்
சேர் எந்தை வரயோகி பதம் ஏத்துமவன் வாழியே
காராரும் பொழில் களமூர் வரத முனி கண்ணருள்
சேர் கருணை இராமானுச முனி கலந்தூழி வாழியே

**சீர்**

வாழி திருச்செண்டலங்கார முனிவன் பொற்பாதம்
வாழியவன் திருமுடியும் வண்புயமும் - வாழியே
களமூர் வரத முனி கருணையால் பூதூரான்
வளம் உரையின் வாழ்வுரைக்கும் சீர்

---

## 4. அனைத்தழகும் கண்ட ரங்கப்ப ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஸௌம்யோபயந்த்ரு முனிவர்ய பத$_{3}$ாப்$_{4}$ஜ ப்$_{4}$ருங்கே
வாநாத்$_{3}$ரி ஸம்யமி பத$_{3}$ாம்பு$_{3}$ருஹைக பே$_{4}$ாகே$_{3}$ |
ராமாநுஜாஹ்வய முநௌ க்ருத ஸர்வ பாரம்
ராமாநுஜம் முநிவரம் ஸிரஸா நமாமி ||

**வாழி திருநாமம்**

தேனமரும் செம்பதுமத் திருத்தாள்கள் வாழியே
செக்கர் நிறத்து எழிலாடை சேர் மருங்கும் வாழியே
தானமருள் கைத்தலமும் முக்கோலும் வாழியே
தடம்புயத்தில் இயங்கும் இருசங்காழி வாழியே
ஞானம் அன்பு வடிவாகும் நங்கள் இராமானுச
நன்முனிவர் தாளிணைகள் நவில் பவளம் வாழியே
ஈனமற எனை ஆளும் இராமானுச முனிவன்
எழிற்கனக முடி வாழி இனிதூழி வாழியே

**சீர்**

வாழி அரங்கப்ப மாமுனிவன் திருப்பாதம்
வாழியவன் வரை மார்பும் மணிவடமும் - வாழியே
செண்டலர்கார முனிவன் பேரருளால் சீர் மாறன்
தண்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 5. திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமத்வ்யோம மஹாஷைல ராமானுஜமுநிப்ரியம் |
ராமானுஜமுநிம் வந்தே$_3$ ஞானாதி$_3$ கு$_3$ணஸாக$_3$ரம் ||

### வாழி திருநாமம்

சீராரும் செம்பதுமத் திருத்தாள்கள் வாழியே
        சிறந்த திருச்சேலை அமர் திருவரையும் வாழியே
ஏராரும் திருமார்பும் புரிநூலும் வாழியே
        இலங்கிய முக்கோல் கரம் இருதோளும் வாழியே
பாராரும் தமிழ் மறையைப் பகர் பவளம் வாழியே
        பைம்பொன் முடி பல்லாண்டு பல்லாண்டு வாழியே
ஆராமம் சூழ் மங்கைக்கனைத்தழகும் கண்ட
        முனி ஆதரவால் அருள் முனிவன் அனைத்தூழி வாழியே

அன்னவயல் குந்தி நகர் அவதரித்தோன் வாழியே
        அருள் திருவாய்மொழிப் பிள்ளை அடி பணிவோன் வாழியே
பன்னு கலை வேதாந்தம் பயின்றிடுவோன் வாழியே
        பதின்மர் கலைப் பொருள் அனைத்தும் பரிந்துரைப்போன் வாழியே
மன்னு புகழ் வரமங்கை வந்துதித்தோன் வாழியே
        வானமாமலை முனி தாள் மனத்து வைப்போன் வாழியே
என்னை இந்தப் பவத்தினின்றும் எடுத்தளிப்போன் வாழியே
        எங்கள் இராமானுச முனி இனிதூழி வாழியே

### சீர்

வாழி வரமங்கை மாமுனிவன் மாமலர்த் தாள்
வாழியவன் கருணை வாழ் விழிகள் - வாழி
திருவாய்மொழிப் பிள்ளை சீரருளால் மாறன்
திருவாய்மொழி உரைக்கும் சீர்

---

## 6. எம்பெருமானார் ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத்வரமுநீந்த்$_3$ராங்க்$_4$ரி வாநாசலமுநிப்ரியம் |
யதீந்த்$_3$ர ஷட$_2$ஜித் ப$_3$க்தம் ராமானுஜமுநிம் ப$_3$ஜே ||

**வாழி திருநாமம்**

எட்டெழுத்தின் மூன்று பொருள் எமக்கு அளித்தோன் வாழியே
இன்னம் இதுக்கு உட்பொருளும் உண்டென்றான் வாழியே
மட்டவிழும் பொழில் மங்கை வந்து உதித்தோன் வாழியே
வானமாமலை அடிகள் வாழ்த்துமவன் வாழியே
தெட்டு புகழ்க் கண்ணன் உரை தேர்ந்துரைப்போன் வாழியே
செம்மையினால் அறுபதத்தின் திறம் உரைப்போன் வாழியே
அட்டதிக்கெண் குந்தி முனி அடி பணிவோன் வாழியே
அனவரதம் இராமானுச முனி வாழி வாழி வாழியே

தேசு பொலி திருமௌலி திருநுதலும் வாழியே
சிறந்த திருக்கண்ணிணையும் திருமூக்கும் வாழியே
வாசமலி பவளமுடன் வாய் முத்தும் வாழியே
வார்குழையும் வரைப் புயமும் மணி வடமும் வாழியே
வீசு புகழ் மணி மார்பும் மணி வயிறும் வாழியே
மிக்க நலம் சேர் மருங்கும் விரியுடையும் வாழியே
மாசில் குணமார் குரங்கும் முழந்தாளும் வாழியே
வானமாமலை முனிவன் மலரடியும் வாழியே

**சீர்**

வாழி வரமங்கை மாமுனிவன் மாமலர்த் தாள்
வாழியவன் சீர் பரவும் வாய் மொழிகள் - வாழியே
குந்தி நகர் மாமுனிவன் கூரருளால் மாறன் இசைச்
செந்தமிழைத் தேர்ந்துரைக்கும் சீர்

---

## 7. பெரிய திருவேங்கட ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமத் யதீந்த்$_{3}$ர ஷட$_{2}$ஜித்சரணாரவிந்த$_{3}$
ப்ரேமாம்புராஸி வரயோகி$_{3}$ பத$_{3}$ாப்$_{3}$ஜப்$_{4}$ருங்கே |
வாநாத்$_{3}$ரி யோகி$_{3}$நி ஸத$_{3}$ா ப்ரணயப்ரவீணம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி நித்யம் ||

**வாழி திருநாமம்**

செஞ்சொல் மறைத் தமிழ் மாறன் திறம் உரைப்போன் வாழியே
ஸ்ரீபெரும்பூதூர் முனி தாள் சிந்தை செய்வோன் வாழியே
அஞ்சொல் மணவாள முனி அருளுடையோன் வாழியே
அரங்க நகர் அப்பன் இணையடி பணிவோன் வாழியே
விஞ்சை முனி தாள் பணியும் வேதியர் கோன் வாழியே
வேதாந்தப் பொருள் அனைத்தும் விளக்குவித்தோன் வாழியே
மஞ்சுலவு மங்கை நகர் வந்துதித்தோன் வாழியே
வானமாமலை முனிவன் மலரடிகள் வாழியே

ஆவணியில் பரணி தனில் அவதரித்தோன் வாழியே
ஆழ்வார்கள் அனைவர் கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
பூவுலகில் வரமுனி தாள் போற்றுமவன் வாழியே
பூதூரான் அடியிணையைப் புகழுமவன் வாழியே
தாவளமா விஞ்சை முனி தாள் தொழுவோன் வாழியே
தத்துவமாம் எட்டெழுத்தைத் தந்தருள்வோன் வாழியே
மேவி வரமங்கை நகர் விளங்குமவன் வாழியே
வேங்கட மாமுனிவன் இந்த மேதினியில் வாழியே

**சீர்**

வாழி வரமங்கை மாமுனிவன் வைபவங்கள்
வாழியவன் கமல மலர்த் தாள்கள் - வாழியே
விஞ்சை வரமுனிவன் மெய்யருளால் மாறன்
செஞ்சொல் மறை தேர்ந்துரைக்கும் சீர்

---

## 8. கோனப்ப ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமச்ஷட$_2$ாரி யதிராட் வரயோகி$_3$ ப$_4$க்தம்
வாநாத்$_3$ரி யோகி$_3$ சரணம் விலஸத்கு$_3$ணாட்$_3$யம் |
விஜ்ஞாத வேத$_3$ஸிக$_3$ரோபய ஸர்வ ப$_4$ாவம்
ராமாநுஜம் யதிவரம் ஸிரஸா நமாமி ||

**வாழி திருநாமம்**

மாமலராள் தனத்துள்ளான் மதிக்க வந்தோன் வாழியே
மாறன் எழில் தமிழ் மறைகள் மருமுவன் வாழியே
சேமமுடை எதிராசர் உரை செப்ப வல்லோன் வாழியே

சீயர் பொன்னடி இணையைச் சிந்தை செய்வோன் வாழியே
தூயமதி வேங்கட முனியைத் தொழு தவத்தோன் வாழியே
தொண்டர் குழாம் அமுது செய்யத் துதிக்குமவன் வாழியே
மாமலராளை இறைஞ்சும் மனச்சீலன் வாழியே
வானமாமலை முனிவன் மலரடிகள் வாழியே

**சீர்**

வாழி திருவேங்கட மாமுனிவன் மாதகவால்
வாழும் வரமங்கை மாமுனிவன் - வாழியே
எந்தை எதிராசர்க்கு இறைவனாம் மாறன் இசைச்
செந்தமிழைத் தேர்ந்துரைக்கும் சீர்

---

## 9. சின்ன ரங்கப்ப ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமச்ஷட$_2$ாரி யதிராட்பத$_3$ பத்$_3$மப$_4$க்த
வானாத்$_3$ரி யோகி$_3$ வரலப்$_3$த$_3$ மஹாப்ரஸாத$_3$ம் |
ஸம்ப்ராப்த வேத$_3$ஸிக$_3$ரோபய தத்வ பே$_3$ாத$_3$ம்
ராமாநுஜம் கு$_3$ருவரம் முநிமாஷ்ரயாமி ||

**வாழி திருநாமம்**

தருவளரும் வரமங்கை தழைக்க வந்தோன் வாழியே
தமிழ் மறையின் உட்பொருளைத் தந்தருள்வோன் வாழியே
மருவளரும் பாஷியத்தை மகிழ்ந்துரைப்போன் வாழியே
வளர் திருவேங்கட முனிவன் மலரடியோன் வாழியே
அருள் வளரும் கோனப்ப முனிக்கு அன்பன் வாழியே
அணியரங்க நகர் அப்பர்க்கு ஆட்செய்வோன் வாழியே
இருள் வலரும் மனத்தவர் தம் இடர் கடிந்தோன் வாழியே
இரங்கப்ப மாமுனிவன் இனிதூழி வாழியே

**சீர்**

வாழியவே அரங்கப்ப மாமுனிவன் மாமலர்த்தாள்
வாழியவன் சோதி மதிமுகமும் - வாழியே

ஓங்கு திருவேங்கட மாயோகி அருளால் ஒண்பொருள்கள்
தேங்கு தமிழ் ஈடுரைக்கும் சீர்

---

## 10. நடுத் திருவேங்கட ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீவாநாசல யோகி$_3$வர்ய க்ருபயா ஸம்ஸித்$_3$த$_4$ போ$_3$தோ$_3$ஜ்வலம்
ஸ்ரீரங்க$_3$ப்ரபு$_4$ கேஸராங்க்$_4$ரி கலிஜித் ராமாநுஜாங்க்$_4$ரயாஷ்ரயம் |
வேதா$_3$ந்த த்$_3$வய தத்வஸார ஸூரபி$_4$ வ்யாக்$_2$யா கலித்$_3$வம்ஸிநம்
ஸ்ரீராமாநுஜ யோகி$_3$ ராஜமநகம் கல்யாணம் பூர்ணம் ப$_4$ஜே ||

### வாழி திருநாமம்

திருமங்கை வரும் செல்வம் சீர் தழைத்தோன் வாழியே
சிரிபாடிய முறையீடு தினம் உரைப்போன் வாழியே
வரமங்கை புரம் வளர வந்துதித்தோன் வாழியே
வானமாமலை அடிகள் வாழ்த்துமவன் வாழியே
தருமங்கை ரங்கப்ப யதி பதத்தோன் வாழியே
சங்காழி சார்ந்தவர்க்குச் சாத்துமவன் வாழியே
சிரமங்கை வைத்தவர்கள் சேர் தாளான் வாழியே
திருவேங்கட ராமானுஜ முனிவன் திருவடிகள் வாழியே

### சீர்

வாழி திருவேங்கட மாமுனிவன் மாமலர்த்தாள்
வாழியவன் அமுத வாய்மொழிகள் - வாழியே
புகழ் சீமான் அரங்கப்ப தேசிகன் இன்னருளால்
வாழி தென் மொழியால் சேமமுடன் ஈடுரைக்கும் சீர்

---

## 11. பெரிய தெய்வநாயக ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத் வாநாத்$_3$ரி யோகீ$_3$ந்த்$_3$ர பத$_3$பங்கஜ ஸம்ஷ்ரயம் |
ஸ்ரீராமாநுஜ யோகீ$_3$ந்த்$_3$ரம் வந்தே$_3$ வாத்ஸல்யவாரிதிம் ||

**வாழி திருநாமம்**

பூவிருந்த செங்கமலப் பொன்னடியோன் வாழியே
புகழ் திருவேங்கட முனியைப் போற்றி செய்வோன் வாழியே
காவிருந்த செங்கநதிக் காருணிகன் வாழியே
காரிமாறன் இன்தமிழின் கருத்துரைப்போன் வாழியே
மாவிருந்த வர முனியை வணங்குமவன் வாழியே
வண் பெரும்பூதூர் முனி தாள் மனத்து வைப்போன் வாழியே
தேவிருந்த வரமங்கை சிறக்க வந்தோன் வாழியே
தெய்வநாயக முனிவன் திகழ் தலத்தில் வாழியே

**சீர்**

வாழி உயர் தெய்வ நாயகனாம் மாமுனிவன்
வாழியவன் செம்மொழி சேர் செம்பவளம் - வாழி
எந்தை திருவேங்கட முனிவன் அருளால் மாறன்
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 12. சின்ன திருவேங்கட ஸ்வாமி

**தனியன்**

வாநாசல யதீந்த்$_3$ராங்க்$_4$ரி ஸரஸீருஹ ஷட்பத$_3$ம் |
வேத$_3$ாந்த வாஸித ஸ்வாந்தம் ராமாநுஜ முநிம் ப$_4$ஜே ||

**வாழி திருநாமம்**

திருவிருந்த மலர்க் கமலச் சேவடிகள் வாழியே
திருவாய்மொழிப் பொருளைத் தேர்ந்துரைப்போன் வாழியே
மருவளரும் வரமங்கை வாழ வந்தோன் வாழியே
வாழ் தெய்வநாயகன் தன் மலர்ப் பதத்தோன் வாழியே
இருள் கடியும் பெரியோர்கள் ஏத்துமவன் வாழியே
எதிராசன் கலைப் பொருளை இனிதுரைப்போன் வாழியே
திருமாலின் உருவம் எனச் சிறந்துதித்தோன் வாழியே
திருவேங்கட முனிவன் திருவடிகள் வாழியே

**சீர்**

வாழி திருவேங்கட முனிவன் மலர்த் தாள்
வாழியவன் செம்பவள வாய் மொழிகள் - வாழியே
எந்தை உயர் தெய்வநாயகன் தன் இன்னருளால்
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 13. சின்ன தெய்வநாயக ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத்வ்யோம மஹாஷை$_2$ல யதிராட் பத$_3$ ஸம்ஷ்ரயம் |
ஷ்ருதஷ்ருத்யந்தயுக$_3$ளம் வந்தே$_3$ ராமாநுஜம் முநிம் ||

### வாழி திருநாமம்

திகழ்கின்ற செங்கமலச் சேவடியோன் வாழியே
தெய்வநாயக முனியைச் சிந்தை செய்வோன் வாழியே
மகிழ் மாறன் மறைப் பொருளை வளர்த்திடுவோன் வாழியே
வாழ் திருவேங்கட முனிவன் மலரடியோன் வாழியே
புகழ்கின்ற பாஷிய நூல் பகர்ந்திடுவோன் வாழியே
பூதூரன் மலர்ப் பதத்தைப் புகழுமவன் வாழியே
இகழ்வின்றி எண்திசையும் இறைஞ்சுமவன் வாழியே
எழில் தெய்வநாயகனார் இருநிலத்தில் வாழியே

### சீர்

வாழி முனி தெய்வநாயகன் தன் மாமலர்த் தாள்
வாழியவன் முக்கோல் முகிழ் முறுவல் - வாழியே
துன்னு புகழ் வேங்கடவன் தொல்லருளால் மாறன் தன்
பன்னு தமிழ் ஈடுரைக்கும் சீர்

---

## 14. கூரத்தாழ்வான் ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத்வ்யோமாத்$_3$ரி யோகீ$_3$ந்த்$_3$ர பாத$_3$பத்$_3$ம மது$_4$வ்ரதம் |
வேத$_3$ாந்தயுக$_3$ நிஷ்ணாதம் ராமாநுஜமுநிம் ப$_4$ஜே ||

### வாழி திருநாமம்

பூவலர் தேன் பொழில் மங்கை போற்ற வந்தோன் வாழியே
புகழ் திருவேங்கட முனி தாள் புகழ்ந்துய்ந்தோன் வாழியே
பாவலரும் பாஷியத்தைப் பரிந்துரைத்தோன் வாழியே
பராங்குசனார் சொற்பொருளைப் பகருமவன் வாழியே
தேவன் எனப் பகர வந்த தேசிகனார் வாழியே
தெய்வநாயக முனியைச் சிந்தை செய்வோன் வாழியே
மூவுலகும் போற்றிட முக்கோல் தரித்தான் வாழியே
முனி கூரத்தாழ்வான் தன் மொய்கழல்கள் வாழியே

### சீர்

வாழியவே கூரேச மாமுனிவன் செவ்வடிகள்
வாழி அவன் உரைக்கும் வாய் மொழிகள் - வாழியே
எந்தை திருவேங்கடன் அருளால் மாறன் தன்
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 15. ஸ்ரீவத்ஸ சிஹ்ந ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீவேங்கடேஷ கருணாப்$_3$த$_3$ ஸமஸ்த வித்$_3$யம்
வாநாத்$_3$ரியோகி$_3$ பத$_3$பங்கஜ ப்$_4$ருங்க$_3$ராஜம் |
வேத$_3$ாந்த யுக்$_3$ம விஸதீகரண ப்ரவீணம்
ராமாநுஜம் முநிவரம் ஸிரஸா நமாமி ||

### வாழி திருநாமம்

பூமாதின் அருள் மருவப் புரிந்திடுவோன் வாழியே
புகழ் திருவேங்கடத்தானைப் போற்றுமவன் வாழியே
மாமாது மங்கை நகர் வாழ வந்தோன் வாழியே
வரமுனி கூரத்தாழ்வான் மலர்ப் பதத்தோன் வாழியே
பாமருவின் பாஷியத்தைப் பரிந்துரைப்போன் வாழியே
பராங்குசனார் சொற்பொருளைப் பரிந்துரைப்போன் வாழியே
தேமொழி சேர் எட்டெழுத்தைச் செப்ப வல்லோன் வாழியே
சிரீவத்ஸ சின்ன முனி சேவடிகள் வாழியே

**சீர்**

வாழியவே ஸ்ரீவத்ஸ சின்ன முனி மாமலர்த் தாள்
வாழ் அவன் பேரும் பெரும் புகழும் - வாழியே
கூரேச மாமுனிவன் கூரருளால் மாறன் தொல்
சீர்த் தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 16. திருநகரி வேங்கட ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமத்ஷட$_2$ாரிசரணாம்பு$_4$ஜ ராஜ ஹம்ஸம்
ஸ்ரீவாநாஷைல முநிவர்ய பத$_3$ாப்$_3$ஜ ப்$_4$ருங்க$_3$ம் |
ஆம்நாய ஷீர்ஷயுக$_3$ பே$_4$ாத$_3$ந ஸம்ப்ரவீணம்
ராமாநுஜம் யதிவரம் ஸிரஸா நமாமி ||

**வாழி திருநாமம்**

வரமங்கை நகர் வாழ வந்துதித்தோன் வாழியே
வாழ் திருவேங்கடவன் முனிவன் மலரடியோன் வாழியே
மருள் கடியும் பெரியோர்கள் வாழ்த்துமவன் வாழியே
மகிழ் மாறன் அடியிணையை மருவுமவன் வாழியே
அருள் புரியும் எதிராசர் அடி தொழுவோன் வாழியே
ஆழ்வார்கள் பதின்மர் கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
திருமகள் தன் சீரருளால் சிறந்த செல்வன் வாழியே
திருவேங்கட மாமுனிவன் திருவடிகள் வாழியே

**சீர்**

வாழி திருவேங்கட முனிவன் பங்கயத் தாள்
வாழி குருகை எனும் மாநகரம் - வாழியே
எந்தை திருவேங்கட முனிவன் இன்னருளால்
செந்தமிழை ஆய்ந்துரைக்கும் சீர்

---

## 17. கோயில் திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீவாநாத்$_3$ரி முநீந்த்$_3$ர பாத$_3$ஜலஜ த்$_3$வந்த்$_3$வா ஷ்ரயாதுல்லஸத்
தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணாம்புராஸிமநகம் தீ$_3$நாத்மஸஞ் ஜீவநம் |
ஸ்ரீவாக்பூ$_3$ஷண கூட ப$_4$ாவவிஸதீ$_3$கார ப்ரவீணம் ஸத$_3$ா
ஸ்ரீராமாநுஜ யோகி$_3$வர்ய மது$_4$லோ தாரஸ்வப$_3$ாவம் ப$_4$ஜே ||

**வாழி திருநாமம்**

தார் புரிந்த தாமரையாள் தாள் தொழுவோன் வாழியே
தமிழ் மறையின் உட்பொருளைத் தந்தருள்வோன் வாழியே
மார்பு தனில் புரிநூலும் மணி வடமும் வாழியே
வளர் திருவேங்கட முனிவன் மலரடியோன் வாழியே
பார் புகழும் ஸ்ரீபாஷியத்தைப் பகருமவன் வாழியே
பற்றியவர்க்கு இனிதமரும் பதம் அருள்வோன் வாழியே
சீர் புனையும் வரமங்கை சிறக்க வந்தோன் வாழியே
திருவேங்கட மாமுனிவன் திருவடிகள் வாழியே

**சீர்**

வாழி திருவேங்கட முனிவன் தாளிணைகள்
வாழி அவன் அமுத வாய் மொழிகள் - வாழியே
எந்தை திருவேங்கட முனிவன் இன்னருளால்
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 18. பெரிய சடகோப ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

வித்$_3$யாஞாந ஸுப்ருக்த மங்க$_3$ளகு$_3$ணை: பூர்ணஸ்ய கே$_3$ாப்துஸ்ஸத$_3$ா
பாத$_3$ாப்$_3$ஜே ஸுதராம் நிவிஷ்டஹ்ருத$_3$யம் வாநாத்$_3$ரி யோகீ$_3$ஸிது: |
வேத$_3$ாந்த த்$_3$வயபாரகம் ஸுப$_4$கு$_3$ணைர்ஜுஷ்$_2$டம் ஸுஸீலாந்விதம்
வந்தே$_3$ லக்ஷ்மண யோகி$_3$வர்யம் அமலம் வாநாசலேஷ$_2$ ப்ரியம் ||

**வாழி திருநாமம்**

வரமங்கை மாநகரில் வந்துதித்தோன் வாழியே

வாழ் திருவேங்கட முனிவன் மலரடியோன் வாழியே
சிரமங்கை வைத்தவர் தாம் சேர் பதத்தோன் வாழியே
தெய்வநாயகன் செல்வம் திருத்தி வைப்போன் வாழியே
கருணையினால் உபதேசக் கதி அளிப்போன் வாழியே
காரிமாறன் தமிழின் கருத்துரைப்போன் வாழியே
சரணாகதி தன்னைத் தந்தருள்வோன் வாழியே
சடகோப மாமுனிவன் தாளிணைகள் வாழியே

மங்குல் தவழ் பொழில் மங்கை வாழ வந்தோன் வாழியே
மால் கூரத்தாழ்வான் தன் மலரடியோன் வாழியே
பொங்கிய செந்தமிழ் மறையின் பொருள் உரைப்போன் வாழியே
புரட்டாசி அசுவதியில் பொலிந்துதித்தான் வாழியே
செங்கமல மாமாதின் சீர் தழைத்தோன் வாழியே
திருவேங்கட முனியைச் சிந்தை செய்வோன் வாழியே
தங்கும் அடியார்க்கு ஆழி சங்கருள்வோன் வாழியே
சடகோப வரமுனிவன் தாளிணைகள் வாழியே

சீர் மருவும் செங்கமலச் சேவடிகள் வாழியே
செம்பொன் எழில் சேலை அமர் திருவரையும் வாழியே
ஏர் மருவும் திருமார்பும் புரிநூலும் வாழியே
எழில் கை அமர் முக்கோலும் இருதோளும் வாழியே
பார் புகழும் பாஷியத்தைப் பகர் பவளம் வாழியே
பங்கயக் கண்ணினை அழகும் பல்லாண்டு வாழியே
தார் புனையும் திருமுடியும் திருமுகமும் வாழியே
சடகோப மாமுனிவன் தாளிணைகள் வாழியே

**சீர்**

வாழி சடகோப மாமுனிவன் தாமரைத் தாள்
வாழி அவன் செம்பவள வாய் மொழிகள் - வாழியே
திருவேங்கட முனி சீர் அருளால் மாறன்
திருவாய்மொழி உரைக்கும் சீர்

---

## 19. பெரிய பட்டர் பிரான் ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீ வாநாஷைல முநிவர்ய கடாக்ஷலப்$_3$த$_3$
வேத$_3$ாந்த யுக்$_3$மவிஸதீகரண ப்ரவீணம் |

ஸ்ரீ ரங்க$_3$ராஜ பத$_3$பங்கஜ ப்$_4$ருங்க$_3$ ராஜம்
ராமாநுஜம் கு$_3$ணநிதி$_4$ம் முநிமாஷ்ரயாம: ||

### வாழி திருநாமம்

அரங்கேசன் அடியிணையை அடைந்துய்ந்தோன் வாழியே
ஆடி தனில் பூரத்தில் அவதரித்தோன் வாழியே
வரமங்கை நகர் தழைக்க வந்துதித்தோன் வாழியே
சடகோப மாமுனியை வணங்குமவன் வாழியே
சுருதி அந்தப் பொருள் தன்னைச் சொல்லுமவன் வாழியே
தொண்டர்களுக்கு உபதேசம் தொகுத்துரைப்போன் வாழியே
பரமன் எதிராஜன் அடி பணியுமவன் வாழியே
பட்டர்பிரான் மாமுனிவன் பதமலர்கள் வாழியே

### சீர்

வாழி பட்டர் பிரான் மாமுனிகள் சேவடிகள்
வாழி அவன் செங்கமலக் கண்ணிணைகள் - வாழி எந்தை
சடகோப முனி இன்னருளால் மாறன் தன்
செந்தமிழைத் தேர்ந்துரைக்கும் சீர்

---

## 20. பெரிய கலியன் ராமானுஜ ஸ்வாமி

### தனியன்

ஷட$_2$ரிபுயதிராட் ஸ்ரீ ரம்யஜாமாத்ரு யோகி$_3$
ப்ரவரக$_3$க$_3$ந பூ$_4$ப்$_3$ருத்யோகி$_3$ ஸஞ்ஜாத ப$_4$க்திம் |
ஸமதம கு$_3$ணபூர்ணம் நெளமி ராமாநுஜாக்$_2$யம்
பரிசித நிக$_3$மாந்த த்$_3$வந்த்$_3$வமார்யம் யதீந்த்$_3$ரம் ||

### வாழி திருநாமம்

வரமங்கை நகரில் வந்துதித்தோன் வாழியே
வைகாசிச் சதயமதை வாழ்வித்தான் வாழியே
பரனும்பர் பிரான் அடியைப் பற்றுமவன் வாழியே
பட்டர்பிரான் மாமுனியைப் பணிந்தெழுவோன் வாழியே
தரும மறைப் பொருள் உலகில் தழைக்க வந்தோன் வாழியே

சடகோப யோகி இருதாள் தொழுவோன் வாழியே
மருவி அன்பர்க்கு எட்டெழுத்தின் வகை உரைப்போன் வாழியே
வாள்கலியன் இராமானுச முனிவன் வாழியே

அன்பர்களுக்கு இன்பம் அளிக்கும் அம்புயத்தாள் வாழியே
அழகுலவு கணை முழந்தாள் அரை உடையும் வாழியே
பொன்புரிநூல் மணிவடமும் புனைமார்பும் வாழியே
புகராழி சங்களிக்கும் புய முக்கோல் வாழியே
நன்பெரிய வீராறு நாமம் எழில் வாழியே
நளிர்மதியை வெல்வன நகை முறுவல் வாழியே
இன்புருவ விழியிணைகட்கேர் மௌலி வாழியே
எந்தை முனி கலிகன்றி இணையடிகள் வாழியே

**சீர்**

வாழி கலிகன்றி மாமுனிவன் மாமலர்த் தாள்
வாழி அவன் செங்கமல் வாய் மொழிகள் - வாழியே
எந்தை முனி பட்டர்பிரான் இன்னருளால் மாறன் உரைச்
செந்தமிழைத் தேர்ந்துரைக்கும் சீர்

---

## 21. பெரிய மதுரகவி ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

காந்தோபயந்த்ரு முனிவர்ய க்ருபா நிவாஸம்
ஸ்ரீவாநாஷைல யதிராட் பத3பத்3ம ஹம்ஸம் |
த்ரய்யந்தயுக்3ம விஸதீகரண ப்ரவீணம்
ராமாநுஜம் யதிபதிம் ஸிரஸா நமாமி ||

**வாழி திருநாமம்**

சீவரமங்கைப் பதியில் சிறக்க வந்தோன் வாழியே
தெய்வநாயகர்க்கு அடிமை செய்யுமவன் வாழியே
மாவருள் நம் கலிய முனி மலர்ப் பதத்தோன் வாழியே
மார்கழியில் கார்த்திகை நாள் வந்துதித்தான் வாழியே
பாவையர்கள் தரும் இருட்டைப் பழித்திட்டான் வாழியே
பட்டர்பிரான் யதி பதத்தைப் பணியுமவன் வாழியே
மாவளரும் நந்திபுர மால் அருளோன் வாழியே

மதுரகவி மாமுனிவன் மலரடிகள் வாழியே

**சீர்**

வாழி மதுரகவி மாமுனிவன் தாள் இரண்டும்
வாழி அவன் முக்கோலும் வாய் முறுவல் - வாழியே
எந்தை கலிகன்றி முனி இன்னருளால் மாறன் தன்
செந்தமிழ்ச் செந்நா உரைக்கும் சீர்

---

## 22. யோகி ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமத் வ்யோம மஹாத்$_3$ரி யோகி$_3$ சரணத்$_3$வந்த்$_3$வாரவிந்த$_3$ாஷ்ரிதம்
ஸ்ரீ கே$_3$ாத$_3$பத$_3$பத்$_3$ம விலஸத்ப$_4$க்தி ப்ரகர்ஷோஜ்வலம் |
த்ரய்யந்த த்$_3$வய கூடப$_3$ாவ விஸதீகார ப்ரவீணம்ஸத$_3$ா
ஸ்ரீ ராமானுஜ யோகி$_3$ ராஜமதுலம் ஷீலாதி$_3$ பூர்ணம் ப$_4$ஜே ||

**வாழி திருநாமம்**

வரமங்கை நகர் சிறக்க வந்த செல்வன் வாழியே
வாழ் தெய்வநாயகனை வழிபடுவோன் வாழியே
அரிய முனி பட்டர்பிரான் அடி பணிந்தோன் வாழியே
ஆடி தனில் பூசத்தில் அவதரித்தான் வாழியே
திருமதுரகவி யோகி சீர் அருளோன் வாழியே
தினம் அடியார்க்கு இதம் உரைக்கும் செவ்விதழோன் வாழியே
உரிய மலர் சூடி அருள் உகந்து வந்தான் வாழியே
யோகி இராமானுசன் தாள் யுக மலர்கள் வாழியே

**சீர்**

வாழியே யோகி இராமானுசன் தாள் வண்ண மலர்
வாழி அவன் பார்வை தரும் வாழ் கருணை - வாழி
மதுரகவி யோகி மனத்தருளால் மாறன்
மதுர மொழி ஈடுரைக்கும் சீர்

---

## 23. சின்ன சடகோப ராமானுஜ ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத் வாந மஹாத்$_3$ரி ஸம்யமி பத$_3$த்$_3$வந்த்$_3$வாப்$_3$ஜ ப்$_4$ருங்க$_3$ாதிபம்
ஸ்ரீமத் விஷ்$_2$ணுஹ்ருத$_3$ாத்மஜா பத$_3$யுகீ விந்யஸ்த ப$_4$க்த்யுஜ்வலம் |
ஷ்ருத்யந்தத்வய கூடப$_4$ாவ விஸதீகார ப்ரவீணம் சத$_3$ா
ஸ்ரீ ராமாநுஜ யோகி$_3$வர்யமநகம் ஸேவே கு$_3$ணாம்பே$_3$ாநிதி$_4$ம் ||

### வாழி திருநாமம்

சீர் திகழும் வரமங்கை திருப்பதியோன் வாழியே
திருவானிக் கேட்டை தனில் சிறந்துதித்தான் வாழியே
ஏர் திகழும் கலிகன்றி யதி பதத்தோன் வாழியே
இராமானுச முனியை ஏத்துமவன் வாழியே
பார் புகழும் பாஷியத்தைப் பரிந்துரைப்போன் வாழியே
பராங்குசன் தன் பா உரையைப் பகர் நாவன் வாழியே
தார் புகழும் வரமங்கைத் தகவுடையோன் வாழியே
சடகோப மாமுனி தாள் சந்ததமும் வாழியே

### சீர்

வாழி சடகோப மாமுனி தாள் சந்ததமும்
வாழி அவன் மார்பும் மதி முகமும் - வாழியே
எந்தை இராமனுசன் தன் இன்னருளால் மாறன்
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 24. சின்ன பட்டர் பிரான் ஸ்வாமி

### தனியன்

வாநாத்$_3$ரியோகி$_3$ பத$_3$பங்கஜ ப$_4$க்திதத்வ
ஞாநாதி$_3$ ஸத்கு$_3$ணக$_3$ணாம்ருத வாரிராஸிம் |
ஷ்ருத்யந்த யுக்$_3$ம ஸூக$_2$பே$_3$ாத$_3$ந ஸம்ப்ரவீணம்
ராமாநுஜம் யதிவரம் ப்ரணமாமி நித்யம் ||

### வாழி திருநாமம்

திரு வளரும் வரமங்கைத் திருநகரோன் வாழியே
சீவரமங்கைப் பதியைச் சிந்தை செய்வோன் வாழியே
அருள் மதுரகவி முனிவன் அடி பணிவோன் வாழியே
ஆசில் சடகோப முனி அருள் உடையோன் வாழியே
பரிவுடையார்க்கு ஆழி சங்கு பகர்ந்தளிப்போன் வாழியே
பங்குனியில் கார்த்திகை நாள் பார் உதித்தான் வாழியே
இருமறையின் உட்பொருளை இயம்புமவன் வாழியே
எந்தை பட்டர்பிரான் முனிவன் இணையடிகள் வாழியே

### சீர்

வாழி பட்டர் பிரான் மாமுனிவன் பாத மலர்
வாழி அவன் கண்ணிணையும் வாய் மொழியும் - வாழி
சடகோப மாமுனிவன் தன் அருளால் மாறன்
திட மொழியின் ஈடுரைக்கும் சீர்

---

## 25. சின்னக் கலியன் ராமானுஜ ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத் யதீந்த்$_3$ர வரயோகி$_3$ பத$_3$ாப்$_3$ஜ யுக்$_3$ம
ப்ரேமாப்$_3$தி$_3$ வாநகி$_3$ரியோகி$_3$ த$_3$யைக பாத்ரம் |
வேத$_3$ாந்த யுக்$_3$ம விஸதீகரண ப்ரவீணம்
ராமாநுஜம் முநிவரம் ஸததம் நமாமி ||

### வாழி திருநாமம்

திங்கள் உலா மாடமங்கைத் திருப்பதியோன் வாழியே
சித்திரையில் அஸ்வினி நாள் சிறக்க வந்தோன் வாழியே
சங்கதமாம் ஞான பக்தி தகவுடையோன் வாழியே
சடகோப மாமுனிவன் தாளிணையோன் வாழியே
பங்கமிலா இருமறை நூல் பகர்ந்தளிப்போன் வாழியே
பட்டர்பிரான் யோகி பதம் பணிந்துய்ந்தோன் வாழியே
எங்கும் உள்ள அடியார்கட்கு இதம் உரைப்போன் வாழியே
எழில் கலியன் மாமுனி தாள் இனிதூழி வாழியே

**சீர்**

வாழி கலிகன்றி மாமுனி தாள் கஞ்ச மலர்
வாழி அவன் வண்புயமும் முக்கோலும் - வாழியே
பட்டர்பிரான் மாமுனி தன் பாங்கருளால் மாறன் பா
தெட்ட புகழ் ஈடுரைக்கும் சீர்

---

## 26. சின்ன மதுரகவி ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீ வாநாத்$_3$ரி யதீந்த்$_3$ர பாத$_3$ஜலஜ த்$_3$வந்த்$_3$வாநுரா கே$_3$ாஜ்வலம்
ஸ்ரீ ரங்கே$_3$ஷய பாத$_3$பத்$_3$ம விலஸத் ஸேவா நிபத்தாதரம் |
ஆம்நாயத் வய ஸேகரார்த்த$_2$ விஸதீகார ப்ரவீணம் ஸத$_3$ா
ஸ்ரீ ராமாநுஜ யோகி$_3$ ராஜமதுலம் ஸேவே த$_3$யாம்போ$_3$நிதி$_4$ம் ||

**வாழி திருநாமம்**

பூவலரும் பொழில் மங்கைப் பொன்னகரோன் வாழியே
புகழ்க் கலியன் முனிவன் அருள் புனைந்திடுவோன் வாழியே
பாமறையும் பாஷியமும் பகருமவன் வாழியே
பரமன் உறை வதரி வரை பணிந்து வந்தோன் வாழியே
ஆமுதல்வன் சடகோப யதி பதத்தோன் வாழியே
ஆடி தனில் அத்தத்தில் அவதரித்தோன் வாழியே
மாமருவும் அரங்கேசன் மகிழ வந்தோன் வாழியே
மதுரகவி மாமுனிவன் மலர்ப் பதங்கள் வாழியே

**சீர்**

வாழி கலிகன்றி மாமுனிவன் இன்னருளால்
வாழும் மதுரகவி மாமுனிவன் - வாழி அவன்
இந்த உலகோர்கள் இன்பமுற மாறன் பா
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 27. சின்ன ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஸ்ரீமச் ஷட$_2$ாரி கலிஜித் யதிராஜ ஸௌம்யஜாமாத்ரு
வாநகி$_3$ரியோகி$_3$ பத$_3$ாப்$_3$ஜ ப$_4$க்தம் |
ஷ்ருத்யந்த யுக்$_3$மஸுக$_2$ பே$_3$ாத$_4$ந ஸம்ப்ரவீணம்
ராமாநுஜம் முநிவரம் கு$_3$ருமாஷ்ரயாம: ||

### வாழி திருநாமம்

வானளவும் பொழில் மங்கை வளநகரோன் வாழியே
வைகாசித் திருமூலம் மகிழ வந்தோன் வாழியே
தேன் இனிய தமிழ் மறையைத் தேர்ந்தளிப்போன் வாழியே
தெள்ளுபுகழ் பாஷியத்தின் திறம் பணிப்போன் வாழியே
ஞானி சடகோப முனி நற்பதத்தோன் வாழியே
நன்மதுரகவி யோகி நலம் புகழ்வோன் வாழியே
ஈனம் அற அடியவர்கட்கு இதம் உரைப்போன் வாழியே
இராமானுச முனிவன் இணையடிகள் வாழியே

### சீர்

வாழி இராமானுசன் தாள் மாநிலத்தில் எஞ்ஞான்றும்
வாழி அவன் வண்மை மிகு வாய் மொழிகள் - வாழி
மதுரகவி மாமுனிவன் மன்னருளால் மாறன்
மதுரகவி ஈடுரைக்கும் சீர்

---

## 28. சடகோப ராமானுஜ ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீ ப$_4$ாஷ்$_2$யகார வரயோகி$_3$ பத$_3$ாரவிந்த$_3$
ப்ரேமாம்புராஸி க$_3$க$_3$நாத்$_3$ரி முநீந்த்$_3$ர ப$_4$க்தம் |
வேத$_3$ாந்தயுக்$_3$ம ஸுக$_2$பே$_3$ாத$_4$ந ஸம்ப்ரவீணம்
ராமாநுஜம் யதிவரம் கு$_3$ருமாஷ்ரயாம: ||

### வாழி திருநாமம்

சீரொளிரும் தென் புதுவை திகழ்ந்துதித்தோன் வாழியே
திருவரங்கன் திருவடியில் சேவை செய்வோன் வாழியே
ஏரொளிரும் மங்கை நகர் இலங்க வந்தோன் வாழியே

எழில் தெய்வநாயகன் தாள் இறைஞ்சுமவன் வாழியே
தீர மிகு கலியன் அடி சென்னி வைப்போன் வாழியே
சித்திரையில் அசுவினி நாள் சிறக்க வந்தோன் வாழியே
தாரக ராமானுசன் தாள் சார்ந்துய்ந்தோன் வாழியே
சடகோப ராமானுசன் மலர்த் தாள்கள் வாழியே

**சீர்**

வாழி சடகோப ராமானுசன் தாள்கள்
வாழி அவன் வண்புயமும் முக்கோலும் - வாழியவே
எந்தை இராமானுசன் இன்னருளால் மாறன் தன்
செந்தமிழின் ஈடுரைக்கும் சீர்

---

## 29. பட்டர் பிரான் ராமானுஜ ஸ்வாமி

**தனியன்**

ஶ்ரீமத் ஷட₂ாரி யதிராஜ பத₃ாப்₃ஜ ப்4ருங்க₃ம்
ஸௌம்யோபயந்த்ரு க₃க₃நாத்3ரி முநீந்த்₃ர ப₄க்தம் |
த்ரய்யந்தயுக்₃ம விஸதீகரண ப்ரவீணம்
ஶ்ரீ ப₄ட்டநாத₂ முநிவர்யம் அஹம் ப₄ஜாமி ||

**வாழி திருநாமம்**

அன்னவயல் சூழ் குருகூர் அவதரித்தோன் வாழியே
அணியரங்கன் திருவடியை அகத்து வைப்போன் வாழியே
சென்னி மிசைக் கலியன் அடி சேர்த்துய்வோன் வாழியே
சித்திரையில் பரணி நன்னாள் செகத்துதித்தோன் வாழியே
தன்னிகரில் வரமங்கைத் தலத்துறைவோன் வாழியே
சடகோப மாமுனிவன் தாள் பணிவோன் வாழியே
பன்னரிய தமிழ் மறைகள் பகர வல்லோன் வாழியே
பட்டர்பிரான் மாமுனிவன் பத மலர்கள் வாழியே

**சீர்**

வாழி பட்டர்பிரான் மாமுனிவன் தாள் இரண்டும்
வாழி அவன் முக்கோலும் மொய்ம்புயமும் - வாழியே

வண்சடகோப முனி இன்னருளால் மாறன் தன்
தண் தமிழ் ஈடுரைக்கும் சீர்

---

## 30. கலியன் ராமானுஜ ஸ்வாமி

### தனியன்

ஸ்ரீமத் யதீந்த்$_3$ர வரயோகி$_3$ பத$_3$ாப்$_3$ஜ ப்$_4$ருங்க$_3$ம்
ஸ்ரீவாநாஷைல முநிவர்ய த$_3$யைகபாத்ரம் |
விஜ்ஞாத வேத$_3$ சிக$_2$ரோபய தத்வபே$_3$ாத$_3$ம்
ராமாநுஜம் கலிஜிதம் முநிமாஷ்ரயாம: ||

### வாழி திருநாமம்

சீர் திகழும் மங்கை நகர் சிறக்க வந்தோன் வாழியே
கார்த்திகையில் பூரத்தில் உதித்த வள்ளல் வாழியே
பார் புகழும் பாஷியத்தைப் பரிந்துரைப்போன் வாழியே
பன்மொழியில் தமிழ் மறையைப் பகர வல்லோன் வாழியே
ஏரார் எதிராசன் அடி ஏத்துமவன் வாழியே
இராமானுசன் தாளிணையை அடைந்துய்ந்தோன் வாழியே
பார் புகழும் பட்டர்பிரான் அருள் உடையோன் வாழியே
எம் கலியன் இணையடிகள் இனிதூழி வாழியே

### சீர்

வாழி கலிகன்றி மாமுனிவன் வண்கழல்கள்
வாழி வரைப்புயமும் முக்கோலும் - வாழியே
எந்தை பட்டர் பிரான் பாங்கருளால் மாறன் தன்
செந்தமிழ் தேர்ந்துரைக்கும் சீர்

---